1970 செப்டம்பர் 3]

கோர்ட்டும் அந்த விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறவர்கள் பெண்களாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தப் பதவிக்குத் தகுதியான போதுமான பெண்கள் இல்லை. அதுபற்றி இப்போது பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டு, சினியாரிடி பிரகாரம் தேர்ந்தெடுக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் இதுவரை அந்தப் பதவிகள் காலியாக வைக்கப்படவில்லை. சீனியர் விமன் ஹெட் நர்சுகளை அந்தப் பதவிகளில் போட்டு வேலை நடந்து வருகிறது. ட்யூடி நர்சுகள் சீனியர் விமன் ஹெட் நர்ஸ் பணியை ஆற்றி வருகிறார்கள்.

Women students for B.E. Course.

*213 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether some girl students have been selected for the B.E. Course in 1969; and

(b) if so, the number selected?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 16.

திரு. கே. விநயகம்: இப்படி ஆண்களே பயின்று வந்த துறையில் பெண்களும் பயில்கிறார்களே, அவர்களது உடல் கூறு இதற்கு சரிவர அமைகிறதா?

Is their sex against them in the matter of becoming proper engineers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சரிவர அமைந்து இருக்கிற காரணத்தினால்தான் 16 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுதியிருக்கிறது என்ற காரணத்தினால்தான் தேர்வுக் குழுவினரும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ரேடியோ என்ஜினியரிங், சிவில் என்ஜினியரிங் ஆகிய துறைகளில் அவர்கள் நன்றாகப் பணியாற்றுகிறார்கள். மெக்கானிக்கல் என்ஜினியரிங் பகுதிகளில்கூட மேல் நாடுகளில் பணியாற்றுகிறார்கள். 1965–66-இல் 4 பேர்கள் இருந்தார்கள். அதற்கு அடுத்த ஆண்டு 3 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 9 பேர்கள், அதற்கடுத்த ஆண்டு 5 பேர்கள் என்றால் இந்த ஆண்டு 16 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 13 பேர்கள் சேர்ந்து பயின்று வருகிறார்கள்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர்

*214. வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள பர்மா தமிழர்களுக்கு தமிழக அரசு கடன் தொகை அளிக்க உத்தேசித்துள்ளதா?

(இ) எவ்வளவு ரூபாய் அளிக்க உத்தேசித்துள்ளது?